கணபதி துணை

# கந்த கானாமுதம்

ஸ்ரீ

**கோடீச்வர ஐயர் இயற்றிய**

***72 மேளராக கீர்த்தனைகள்***

*Typeset using Ω/Λ*

*© August 2005*

# விநாயகர் துதி

நேரிசை வெண்பா

பண்ணிறைந்த மேளமெழு பத்திரண்டிற் பன்னு தமிழ்க்
கண்ணிறைந்த கந்த கானாமுதத்திற்
குண்ணிறைந்த மாமதுரைப் பொற்றாமரைக் கரை வாழ்
மாமுகதா பாமதுர மெட்டுப் பதம்

✠✠✠✠✠

# காப்புப் பாடல்

ராகம் — ஹம்ஸத்வனி (மேளம் 29ல் ஜன்யம்)
தாளம் — ரூபகம்
(ஸ ரி க ப நி ஸ – ஸ நி ப க ரி ஸ)

பல்லவி

வாரணமுகவா துணை வருவாய்
அருள்வாய் தயவாய் (வாரண)

அனுபல்லவி

ஆரணப் பொருளான கந்த கானாமுதத்திற்குன்
கருணாமுதம் உதவியே அருள் மத (வாரண)

*சரணம்*

*இன்னிசை இயல் இலக்கியம் ஆரியம் தமிழ் அறிவேது மின்றி*
*கன்னல் அன்ன இக்கந்த கானாமுத நன்னூலை*
*உன்னும் கவி குஞ்சர தாஸன் நான்*
*உன் அருள் கொண்டே பண்ணத் துணிந்தேன்*
*முன்னவனே நீ முன் நின்றால் முடியாததொன்றில்லை*
*ஆதலால் அதிவேகமதாகவே அருள் மத (வாரண)*

✠✠✠✠✠

## சுத்த மத்தியம மேள கீர்த்தனைகள்

## *1. இந்து சக்ரம்*

# மேளம் ஒன்று — கனகாங்கி

*(ஸ, சுத்த ரி, சுத்த க, சுத்த ம, ப, சுத்த த, சுத்த நி)*

*ஆதி தாளம்*

*பல்லவி*

*<u>கனகாங்க</u> கா ஸுகா குஹா*
*தினம் கா முருகா திருமான் மருகா*

*அனுபல்லவி*

*அனகா அமல பன்னகா பரண*
*ஹரகுரு பராத்பரா சுபகரா*

*சரணம்*

*அடியேன் நான் உய்ய அருள்வாய் நீ துய்ய*
*அமித ஸத் புத்தி அபரிமித பக்தி*
*யோடும் நின்னை ஏத்தி உயர் குமர கீர்த்தி*
*உற கவிகுஞ்சர தாஸனேனைக் (கன)*

✠✠✠✠

# மேளம் இரண்டு — ரத்னாங்கி

*(ஸ, சுத்த ரி, சுத்த க, சுத்த ம, ப, சுத்த த, கைசிகி நி)*

*ஆதி தாளம்*

*பல்லவி*

*தருணம் இதே தயாநிதே*
*அருள் செய்யவே அடியேன் உய்யவே*

*அனுபல்லவி*

*அருமை திருமால் மருகா முருகா*
*அருள் வாக்கருள் செய்தெனை ஆளவே*

*சரணம்*

*நான் உந்தனை ரத்தி நாங்க நாளும் நத்தி*
*ஞான கான ஸித்தி நாத பாத பக்தி*
*நற் குஞ்சர தாஸன் நான் அடைந்துன் நேசன்*
*ஆகியே நானும் ஓர் ஆளாகவே*

✠✠✠✠

# மேளம் மூன்று — கானமூர்த்தி

*(ஸ, சுத்த ரி, சுத்த க, சுத்த ம, ப, சுத்த த, காகலி நி)*

*ஆதி தாளம்*

*பல்லவி*

*மா மதுர ஸாரஸ ஸரஸ*
*மா ஸத்குண நிதி நீயே கதி*

*அனுபல்லவி*

*பா மதுராபுரி மீனாக்ஷி அருள்*
*பாலா வடிவேலா ஸுகசீலா மிகு கோலாஹலா*

*சரணம்*

*தாருநிகர் உதாரதீர கன கம்பீர வீர மார ஸ்ரீ*
*ஸுப்ரமண்ய மூர்த்தி கார்த்திகேய மூர்த்தி*
*கல்யாணமூர்த்தி காங்கேய மூர்த்தி*
*கானமூர்த்தி கவிகுஞ்சர தாஸன் ஆப்த மூர்த்தி*

✠✠✠✠✠

# மேளம் நான்கு — வனஸ்பதி

*(ஸ, சுத்த ரி, சுத்த க, சுத்த ம, ப, சதுசுருதி த, கைசிகி நி)*

*ஆதி தாளம்*

*பல்லவி*

*தாஸ நேச குஹேசனே நிஜ*
*தேஜனே க்லேச நாசனே ஸதா நினை*

*அனுபல்லவி*

*வாஸவாதி வந்தித பாத வேத கீத*

*சரணம்*

*தீனனேனாம் பூங்கொடிக் கான வனஸ்பதே*
*புத்திபதே தீம் தேன்கவி குஞ்சரதாஸன் தேவதே*

✠✠✠✠✠

# மேளம் ஐந்து — மானவதி

*(ஸ, சுத்த ரி, சுத்த க, சுத்த ம, ப, சதுசுருதி த, காகலி நி)*

*ரூபக தாளம்*

*பல்லவி*

*நிஜபக்தி நித்யானந்தம் தா கந்தா*
*அஜவாஹனா ஞானகனா*

*சரணம்*

*வாஸமலரோடு சொல் மாமண*
*மலரால் வர கவி குஞ்சர*
*தாஸ விச்வாஸ நின் பூசை*
*நேசம் அறா ரம்ய மானவதி*

✠✠✠✠✠

# மேளம் ஆறு — தானரூபி

*(ஸ, சுத்த ரி, சுத்த க, சுத்த ம, ப, ஷட்சுருதி த, காகலி நி)*

கண்ட சாபு தாளம்

பல்லவி

வா வேலவா வா மாவல வா

அனுபல்லவி

வா தேவாதிதேவா மஹானுபாவா

சரணம்

வா மரகத மயூர வாஹனா
மோஹனா மாகனா நாகநாதா
வா ஸதா முதகீத தானரூப
வா மதுர கவிகுஞ்சர தாஸ விச்வாஸ

✠✠✠✠✠

## 2. நேத்ர சக்ரம்

# மேளம் ஏழு — ஸேனாவதி

(ஸ, சுத்த ரி, ஸாதரண க, சுத்த ம, ப, சுத்த த, சுத்த நி)

மிச்ர சாபு தாளம்

பல்லவி

வந்தருள் நீ தா அனதநாதா

*அனுபல்லவி*

*மந்திர வேத தந்திர கீத*
*சுந்தர ஸுபோத ஸுகாதீத*

*சரணம்*

*நாயினும் கடையேன் நான் ஆயினும் ஸேனாபதி*
*பசுபதி ஸ்ரீபதி துதி கருணாநிதி*
*நீ கதி யாமெனவே மதி*
*திதி கவி குஞ்சர தாஸன் உய்ய ததி*

✠✠✠✠✠

## மேளம் எட்டு — ஹனும தோடி

*(ஸ, சுத்த ரி, ஸாதரண க, சுத்த ம, ப, சுத்த த, கைசிகி நி)*

*மிச்ர சாபு தாளம்*

*பல்லவி*

*கலி தீர வந்தருள் ஸுகுமார*

*அனுபல்லவி*

*மலி வார விஜய நவவீரரோடுலக்க*
*வீர ஸோதர பரிவார*

*சரணம்*

அறுமுகவ அடியேன் படுதுயர்களை பவ
இவ் வனும தோடி க் கருள் இபமுக துணைவ
அறுகரவச் சடை அர புத்திர பார்த்திப
அபிநவ கவி குஞ்சர தாஸன்

✠✠✠✠✠

# மேளம் ஒன்பது — தேனுகா

(ஸ, சுத்த ரி, ஸாதரண க, சுத்த ம, ப, சுத்த த, காகலி நி)

ஆதி தாளம்

பல்லவி

கருணைக் கடலே கைவிடேல்

அனுபல்லவி

தெருள் நல் பொருள் நல் திரு மெய்த்திட
தர பக்தி அருள் சரண் உற்றிட

சரணம்

வன மோஹன மான் அருள் மாதருள் தேன்
தினைமாவின் இதம் தெரி மோஹிதனே
கனமோஹன மா மயில் வாகனனே
மன மோஹன மால் மருகா குஹனே
தினம் ஓர் தன மோடருள் மா தனமே
திருமா மயிலை அறுமா முகனே
கன காம தேனுகாவென இனுமே
கவி குஞ்சர தாஸனுக் கருள் நலமே

✠✠✠✠✠

# மேளம் பத்து — நாடகப்ரியா

*(ஸ, சுத்த ரி, ஸாதரண க, சுத்த ம, ப, சதுசுருதி த, கைசிகி நி)*

*ஆதி தாளம்*

*பல்லவி*

*இரங்காதா ஸாமிநாதா நின் திருவுள்ளம்*
*ஏழையென் மீதிப்போது*

*அனுபல்லவி*

*பரம் கா தா வரம் வரதா ரதா ஸதா முதா*
*புரம் காய்ந்த ஸதாசிவ ஸுதா உதார தாதா*

*சரணம்*

*தயா ஸத்குணாலயா நாடக*
*ப்ரியா பேதையேன் ஐயா நம்பினேன்*
*நயா நற்கவி குஞ்சர தாஸனையாள*
*நல் வேளையாம் இதில்*

✠✠✠✠✠

# மேளம் பதினொன்று — கோகிலப்ரியா

*(ஸ, சுத்த ரி, ஸாதரண க, சுத்த ம, ப, சதுசுருதி த, காகலி நி)*

*ரூபக தாளம்*

*பல்லவி*

*ஸுகவாழ்வடைந்துய்வாய் செய்வாய்*
*துதி மனமே நீ*

*அனுபல்லவி*

*மகவான் மகள் மான் மகள்*
*மணவாளனையே ஏழை பங்காளனையே*

*சரணம்*

*மகரந்தம் தங்கும் தண் பொழில் பொங்கும் தென் செந்திற்*
*குமரன் தன் செம்பொன்னம்புஜபதமே மேவும்*
*அகமும் பண் தண் கோகிலப்ரியமும் கொண்டன்பின்பம்*
*பெருக உல்லாஸ கவி குஞ்சர தாஸ*

✠✠✠✠

# மேளம் பன்னிரெண்டு — ரூபாவதி

*(ஸ, சுத்த ரி, ஸாதரண க, சுத்த ம, ப, ஷட்சுருதி த, காகலி நி)*

*ஆதி தாளம்*

*பல்லவி*

*நாளாகுதே நாதா வ்ருதா வா*

அனுபல்லவி

தாளாதரம் தர வேலவா நல்
வேளானுகூலம் வராமல் ஏன்

சரணம்

பாடாமல் நின் பொன் அடிமலர்
சூடாமல் பரகதி நாடாமல்
வேடாரதி ரூபாவதி
வேளா கவி குஞ்சர தாஸன்

✠✠✠✠

# 3. அக்னி சக்ரம்

## மேளம் பதிமூன்று — காயகப்ரியா

(ஸ, சுத்த ரி, அந்தர க, சுத்த ம, ப, சுத்த த, சுத்த நி)

கண்ட சாபு தாளம்

பல்லவி

நாதநிலை கண்டுருக நான் அருகனா
நாத நினதருள் வலியினால் அலதெனால்

அனுபல்லவி

ஓது சரியை கிரியை யோக ஞானபரனா நான்

மோஹன மனோஹர குஹ கனா நல்

சரணம்

ஏழிசை லய ச்ருதிலிய யாழ் குர லெழு
கன நய தேசிக தச விதமா கமக கானம்
வாழும் அன்பொடின் புற மதுர கவி மதகஜ
தாஸ காயகப்ரியன் ஐயா நீ ப்ரியமுற

✠✠✠✠✠

# மேளம் பதிநான்கு — வகுளாபரணம்

(ஸ, சுத்த ரி, அந்தர க, சுத்த ம, ப, சுத்த த, கைசிகி நி)

ஆதி தாளம்

பல்லவி

நம்பினேன் ஐயா நாதா நின் பதம்

அனுபல்லவி

துன்ப வேலை தீர்ந்து
இன்ப வேலை ஆர்ந்து
நின் பொன் வேலை ஓர்ந்துன்
அன்பனேன் அருள் சார்ந்துய்ய

சரணம்

துரித தாப ஹரண ஸுர வினுத சரண

*வரத மா விதரண வரவகுளாபரண*
*பரித சீத கிரண பரிசுத்தாந்தஃ கரண*
*ஸரஸ கவி குஞ்சர தாஸ பரண*

✠✠✠✠

# மேளம் பதினைந்து – மாயாமாளவகௌள

*(ஸ, சுத்த ரி, அந்தர க, சுத்த ம, ப, சுத்த த, காகலி நி)*

*ஆதி தாளம்*

*பல்லவி*

*நான் என் செய்வேன் ஸாமி*
*நாதா நின் அருள் செய்யாவிடில்*

*அனுபல்லவி*

*ஆனந்த மாகந்த அனவரதம் உன் அந்த*
*மான பதம் நினைந்து அத்யந்த பக்தியில் முந்த*

*சரணம்*

*சேயா மாயா மாளவ கௌளாதி*
*மேள ராக தாள ஸஞ்சார கவி குஞ்சர தாஸன்*
*ஆயாதிழைத்த பிழை அது நீ பொறுத்தி விழை*
*நேயா மிகுந்தருளை நீ கொடுத்தருள் ஏழை*

✠✠✠✠

# மேளம் பதினாறு — சக்ரவாகம்

*(ஸ, சுத்த ரி, அந்தர க, சுத்த ம, ப, சதுசுருதி த, கைசிகி நி)*

*ரூபக தாளம்*

*பல்லவி*

*காணக்கண் கோடி வேண்டும்*
*கருணாகர முருகனை*

*அனுபல்லவி*

*ஆணிப்பொன் ஸ்ரீ ஸுப்ரமண்யனை*
*வெகு கண்யனை*

*சரணம்*

*கடலிடைக் கதிர் உதயமான*
*கன உக்ர சக்ரவகமான*
*அடல் மயில் மீதொளிரும் குஹனை*
*அனவரத சித் ஸுகனை*
*மடமயில் வள்ளி குஞ்சரி மண*
*வாளனைச் செவ்வேள் தனை*
*திட பக்த கவி குஞ்சர வர சீல*
*சீல தாஸ தயாளனை*

✠✠✠✠✠

# மேளம் பதினேழு — ஸூர்யகாந்தம்

*(ஸ, சுத்த ரி, அந்தர க, சுத்த ம, ப, சதுசுருதி த, காகலி நி)*

*ஆதி தாளம்*

*பல்லவி*

*கஞ்சம் கொஞ்சம் செஞ்சரண் நின்*
*தஞ்சம் தஞ்சம் தஞ்சம் ஷண்முகம் நின்*

*அனுபல்லவி*

*பஞ்சம் கலி பறந்தோடவும்*
*நெஞ்சம் நினைத்துனை நாடவும்*

*சரணம்*

*குணாகர கோடி ஸூர்யகாந்த*
*குமார முருகா குரு பரானந்த*
*கணாகன கருணாகர கந்த*
*கவி குஞ்சர வர தாஸ ஹ்ருத் கந்த*

✠✠✠✠✠

# மேளம் பதினெட்டு — ஹாடகாம்பரி

*(ஸ, சுத்த ரி, அந்தர க, சுத்த ம, ப, ஷட்சுருதி த, காகலி நி)*

*ஆதி தாளம்*

பல்லவி

ஆளலாகாதா அடியேனை நாதா நீ தான்

அனுபல்லவி

ஆளாய் நின் பொன்னடிக்
கடிமை பூண்டனுதினம்
அறுமுக ஹர குருகுஹ பன்
னிரு கர முருக என்றுருக த்தந் (தாள)

சரணம்

திகம்பரி திரிசூலதரி ஜகம் தரும் ஜடாதரி
ஆடகம்பரி ஹரஸகி ஹரி ஸோதரி ஸுந்தரி தரு ஸுதனே
அகம் தனில் நினைந்த நல் வரம் தர இசைந்த னா
யாஸ கவி குஞ்சர வர தாஸ விச்வாஸனை நேசமோடு

✠✠✠✠

## 4. வேத சக்ரம்

# மேளம் பத்தொன்பது — ஜங்காரத்வனி

(ஸ, சதுசுருதி ரி, ஸாதாரண க, சுத்த ம, ப, சுத்த த, சுத்த நி)

மிச்ர சாபு தாளம்

பல்லவி

வரம் தாரும் ஸாமிநாதா நல்

அனுபல்லவி

கரம் தாரும் காருன் எனை நீர் கடைக்-
கண் பாரும் ஆதாரம் தாரும் வாரும்

சரணம்

ஹ்ரீம்கார ஐங்காரத்வனி யுத
ஓம்கார நாத வண்டார் பூம் பாத
ச்ருங்கார வர கவி குஞ்சர தாஸ ஹித
ஸத் பக்தி ஸஹித ஸகலவித

✠✠✠✠✠

# மேளம் இருபது — நடபைரவி

(ஸ, சதுசுருதி ரி, ஸாதாரண க, சுத்த ம, ப, சுத்த த, கைசிகி நி)

ரூபக தாளம்

பல்லவி

அம்போருஹ பாதமே
நம்பினேன் நின் பொன்

அனுபல்லவி

சம்போ சங்கர பரமேச குருகுஹமே
பர ப்ரம்ம ஸ்வரூபமே ஷண்முகமே நின்

சரணம்

மாகாளி மதுரமா <u>நடபைரவி</u> அம்ப
தரு குமார சதகோடி மதனாகாரதேகா
ச்ருங்கார ஸ்ரீகர கவி குஞ்சர
வர தாஸா தார மதுரதர (நின்)

✠✠✠✠✠

# மேளம் இருபத்தி ஒன்று — கீரவாணி

(ஸ, சதுசுருதி ரி, ஸாதாரண க, சுத்த ம, ப, சுத்த த, காகளி நி)

## கண்ட சாபு தாளம்

பல்லவி

வேலவா வா வினை தீர வேல் வீர

அனுபல்லவி

சீல பக்த பரிபால ஜெயசீல
கால கால சிவபால கருணாலவால

சரணம்

ஸுகுமார குருபர பன்னிருகர பரசுபாணி
ஸுதர்சன பாணி ஸு <u>கீரவாணி</u> சர்பணி பத
யுக ஸரோருஹ குஹ யுவ மாமணி உன
தருளணி கவி குஞ்சர தாஸ ஸத் சிந்தாமணி

✠✠✠✠✠

# மேளம் இருபத்தி இரண்டு — கரஹரப்ரியா

*(ஸ, சதுசுருதி ரி, ஸாதாரண க, சுத்த ம, ப, சதுசுருதி த, கைசிகி நி)*

*ஆதி தாளம்*

*பல்லவி*

*கண் பாரையா கந்தா காரையா*

*அனுபல்லவி*

*நண்பாரென தன்பா கன*
*பண்பாகவே பரி பூர்ண க்ருபை*

*சரணம்*

*மா கருணா மய ஸாகரா மான மெய் ஞானாகர*
*வாகார் பன்னிருகர ஸ்ரீகர வானிந்த்ர தரு நேர் உதார*
*மோஹர திமிர திவாகர மோஹன வல்லீ மனோஹர*
*ஸ்ரீ கரஹரப்ரிய முதாகர ஜெயகர கவி குஞ்சர தாஸ பர*

✠✠✠✠

# மேளம் இருபத்தி மூன்று — கௌரிமனோஹரி

*(ஸ, சதுசுருதி ரி, ஸாதாரண க, சுத்த ம, ப, சதுசுருதி த, காகலி நி)*

*ஆதி தாளம்*

*பல்லவி*

*பாராய் அருள் தாராய் பொருள்*
*தீரா வினை தீர்த்தருள்*

*அனுபல்லவி*

*தீரா மயில் வீரா அயில்*
*குமாரா முகில் உதாரா கம்பீரா நீ*

*சரணம்*

*நீல ஹரி மால் ஸோதரி*
*வால* கௌரீ மனோஹரி
*பால கவி கரிதாஸ பரி*
*பாலா பரிவால் ஆதரி*

✠✠✠✠

# மேளம் இருபத்தி நான்கு — வருணப்ரிய

*(ஸ, சதுசுருதி ரி, ஸாதாரண க, சுத்த ம, ப, ஷட்சுருதி த, காகலிகி நி)*

## *ஆதி தாளம்*

*பல்லவி*

*சிங்கார குமார என் ஜீவாதர உதார*

*அனுபல்லவி*

வெங்கோப கோர சூர ஸம்ஹார தீர வீர மார

சரணம்

அருணகிரிக்குன் அருள் வாக்கருளியவா
றடியேன் தனக்கும் அருளத் தருணம் இதே
வருணப்ரிய மாமயில் வாஹன ஸுகுண
வரத கவி குஞ்சர தாஸ கருணாகர

✠✠✠✠

## 5. பாண சக்ரம்

# மேளம் இருபத்தி ஐந்து — மாரரஞ்சனி

(ஸ, சதுசுருதி ரி, அந்தர க, சுத்த ம, ப, சுத்த த, சுத்த நி)

ஆதி தாளம்

பல்லவி

மாலாகினேன் வேலா நின் மேல்

அனுபல்லவி

நாலார் மறை மேலகம
மூலா மதி விசாலா சாலா நான்

சரணம்

காரார் அஞ்சனக் கட்குறமின்

*மோகாவெனவே ஸதா நான் உருக*
*மார ரஞ்சன மான் மருகா கன*
*வர கவி குஞ்சர தாஸன் நின் தாள் மருவ*

✠✠✠✠✠

# மேளம் இருபத்தி ஆறு — சாருகேசி

*(ஸ, சதுசுருதி ரி, அந்தர க, சுத்த ம, ப, சுத்த த, கைசிகி நி)*

*ஆதி தாளம்*

*பல்லவி*

*நீ தான் அப்பா அபாரக்ருபா*
*நிதே நீ தேஹி பக்தி பக்யம்*

*அனுபல்லவி*

*நீ தான் அப்பா என்போற் பேதை அடியார்க்கு*
*ஆதார பூதன் அனாத நாதன்*

*சரணம்*

*ஆசாரமிலனாயினும் நின் தாட்கன்பில் மா*
*நீசனாயினுமே நினையே நினைந்துருக*
*மா சாருகேசி வள்ளி சமாசில்*
*வாகீச வர குஞ்சர தாஸ ஹ்ருத் வாஸன்*

✠✠✠✠✠

# மேளம் இருபத்தி ஏழு — ஸரஸாங்கி

*(ஸ, சதுசுருதி ரி, அந்தர க, சுத்த ம, ப, சுத்த த, காகலி நி)*

*ரூபக தாளம்*

*பல்லவி*

*மலையாதே மனமே வீணே நீ*

*அனுபல்லவி*

*மலையது விழினும் தன் தலையாலே தாங்கவே*
*தலைவன் அறுமுகவன் இலையா*

*சரணம்*

*மான் மருகன் வேல் முருகன்*
*வனசர கன ஸரஸாங்கி மணவாளன்*
*தான் வர கவி குஞ்சர தாஸன் உன்*
*தனையே எந்நாளும் நன்காளும்*

✠✠✠✠✠

# மேளம் இருபத்தி எட்டு — ஹரிகாம்போதி

*(ஸ, சதுசுருதி ரி, அந்தர க, சுத்த ம, ப, சதுசுருதி த, கைசிகி நி)*

*ஆதி தாளம்*

பல்லவி

நீயே கதி என் தாயே ததி

அனுபல்லவி

நாயேன் அதிபதி
சேயே வனோர் ஸேனாதிபதி

சரணம்

ஆதி அயன் ஹரி க் காம்
upshape போதி அருள் போத குரு
கோதில் கவி குஞ்சர
தாஸன் குலநிதி

✠✠✠✠

# மேளம் இருபத்தி ஒன்பது — தீரசங்கராபரணம்

(ஸ, சதுசுருதி ரி, அந்தர க, சுத்த ம, ப, சதுசுருதி த, காகலி நி)

ஆதி தாளம்

பல்லவி

எனை ஆளய்யா இவ்வேளையே வந் (தெனை)

அனுபல்லவி

வினையாளனேன் ஆனாலுமே நான்

உனையே நான் நம்பவிலையா வேலையா

சரணம்

கோர சூர ஸம்ஹார தீர சங்
கரா பரண சங்கர குமார ச்ருங்
கார கவி குஞ்சர தாஸனே மந்
தார கற்பகம் காரும் ஒப்ப வந் (தெனை)

✠✠✠✠✠

# மேளம் முப்பது — நாகாநந்தினி

(ஸ, சதுசுருதி ரி, அந்தர க, சுத்த ம, ப, ஷட்சுருதி த, காகலி நி)

ஆதி தாளம்

பல்லவி

நாயேன் உனையே நம்பினேன்
தாயே எனவே நீ எனையாள

அனுபல்லவி

ஸ்ரீயே தரு சிவனார் திருச்
சேயே குரு வாயே அருள் தர

சரணம்

மாகான் அந்த மினாள் நாண் இடைமின்
நாகாநந்தினி ஞான குஞ்சரி
பாகா கனி பால் போல் இனி

பாவலன் நீ இப தாஸனாம் மிந்

✠✠✠✠✠

# 6. ருது சக்ரம்

## மேளம் முப்பத்தி ஒன்று — யாகப்ரியா

(ஸ, ஷட்சுருதி ரி, அந்தர க, சுத்த ம, ப, சுத்த த, சுத்த நி)

ஆதி தாளம்

பல்லவி

சம்பு ஸதா சிவ ஸுத உதார
ஸத்பக்தி ஸாம்ராஜ்ய ப்ரத

அனுபல்லவி

லம்போதர ஸோதர ஸ்ரீதர
அம்போருகர்க் கரிய குஹ வர

சரணம்

மோஹக் கடலுள் மூழ்காத மோஹ-
மாகப்பெருகுன் அருட்கடல் மூழ்க
<u>யாகப்ரிய </u> செம்பாகக் கவி
யனைக்கடி யேனுக்கருள்

✠✠✠✠✠

# மேளம் முப்பத்தி இரண்டு — ராகவர்த்தனி

(ஸ, ஷட்சுருதி ரி, அந்தர க, சுத்த ம, ப, சுத்த த, கைசிகி நி)

ஆதி தாளம்

பல்லவி

கலங்காதே மனமே நீ இனமே

அனுபல்லவி

துலங்கெழில் வேலன் பதம் நிதம்
துதி மதி இதே ததி

சரணம்

ஸுர ராக வர்த்தன பக்த பரிபாலன
குஹன் குணமால் மருகன்
வர கவி குஞ்சர தாஸன் நின் பால்
வருவன் அருள் தருவன்

✠✠✠✠

# மேளம் முப்பத்தி மூன்று — காங்கேயபூஷணி

(ஸ, ஷட்சுருதி ரி, அந்தர க, சுத்த ம, ப, சுத்த த, கைசிகி நி)

ரூபக தாளம்

பல்லவி

நினை மனமே நீ தீவினை தீரவே குஹனை

அனுபல்லவி

நினை நினை நீ நைந்துருகி உனை மறந்து

சரணம்

நீங்கும் பிணி நீங்கும் கலி நீங்கும் பல தீங்கும்
ஓங்கும் புகழ் ஓங்கும் செல்வம் ஓங்கும் ஆயுள் ஓங்கும்
பாங்காக காங்கேய பூஷண குணமணியை
பத கவி குஞ்சர தாஸன் பைந்தரு சிந்தாமணியை

✠✠✠✠✠

## மேளம் முப்பத்தி நான்கு — வாகதீச்வரி

(ஸ, ஷட்சுருதி ரி, அந்தர க, சுத்த ம, ப, சதுசுருதி த, கைசிகி நி)

ஆதி தாளம்

பல்லவி

நாதானு ஸந்தான நன்
மார்க்கமே ஸன் மார்க்கம் மனமே

அனுபல்லவி

ஸீதபதி வேதா துதி
பாதாரவிந்த பரமானந்த கந்த

சரணம்

தேஹாரோக்யம் திடபக்தி பாக்யம்
தீர்க்காயுள் ஸத் ஸந்தான சௌபாக்யம்
வாகதீச்வரி வர க்ருபாகரம்
தரும் வர கவி குஞ்சர தாஸன் தன்

✠✠✠✠✠

# மேளம் முப்பத்தி ஐந்து — சூலினி

(ஸ, ஷட்சுருதி ரி, அந்தர க, சுத்த ம, ப, சதுசுருதி த, காகலி நி)

ஆதி தாளம்

பல்லவி

பராமுகமதேனோ என்மேல் குரு
பரா இது தருமம் தானோ (என் மேல்)

அனுபல்லவி

ஓராருமுக உனையே அல
தொராதரவுமிலையே (என் மேல்)

சரணம்

அபார வர கருணாகர
கபால கர திரி சூலினி
ஸுபால ஸுர பரிபாலினி
ஸுதா கவி குஞ்சர தாஸன் என் மேல்

✠✠✠✠✠

# மேளம் முப்பத்தி ஆறு — சலநாட்ட

*(ஸ, ஷட்சுருதி ரி, அந்தர க, சுத்த ம, ப, ஷட்சுருதி த, காகலி நி)*

*ஆதி தாளம்*

*பல்லவி*

*ஏதய்யா கதி எனக் (கேதய்யா கதி)*

*அனுபல்லவி*

*மாதயாநிதி உமாபதி ஸுகுமார*
*வரகுண நிதி நீ தான் அலது வே (றேதய்யா கதி)*

*சரணம்*

*பேதயேற் குனருள் காட்டாதெனோ*
*டேதையா விளையாட்டா*
*பூதலா சல நாட்டா நின்தாட்டான் கதி*
*புகழ் கவி குஞ்சர தாஸனுக்கு வே (றேதய்யா கதி)*

✠✠✠✠

# ப்ரதி மத்தியம மேள கீர்த்தனைகள்

## *7. ரிஷி சக்ரம்*

## மேளம் முப்பத்தி ஏழு — ஸாலகம்

*(ஸ, சுத்த ரி, சுத்த க, ப்ரதி ம, ப, சுத்த த, சுத்த நி)*

*ஆதி தாளம்*

*பல்லவி*

*கானாமுதம் தா நீ நிதம்*
*ஞானாமுத ஸாகரமே எனும் அமித*

*அனுபல்லவி*

*தானாய் அருள் தேனாம் பதம்*
*நானாவித ரஞ்சிதம் தரும் திவ்ய*

*சரணம்*

*மாலாக மகிழ் மருகா குஹா*
*மதி ஸாலகமே உறு முருகா*
*கோலாகலா கூர் வேலா கவி*
*குஞ்சர தாஸன் அகம் குளிர் திவ்ய*

✠✠✠✠✠

# மேளம் முப்பத்தி எட்டு — ஜலார்ணவம்

*(ஸ, சுத்த ரி, சுத்த க, ப்ரதி ம, ப, சுத்த த, கைசிகி நி)*

*ஆதி தாளம்*

*பல்லவி*

*கனக மயூர கமன கம்பீர*
*காருண்ய குமாரா கலி தீர் உதார*

*அனுபல்லவி*

*அனக வேல் வீர அறுமுக மார*
*கன மணி திகழ் அலைவாய் செந்தூர*

*சரணம்*

*அஞ்சலென்றருள் அபயகர தலச்*
*செங்கமல அமல வரத கர கமல*
*ரஞ்சித கர விமல ஜலார்ணவ*
*கவி குஞ்சர தாஸ நிமல கமல ஹ்ருத் வாஸ*

✠✠✠✠✠

# மேளம் முப்பத்தி ஒன்பது — ஜாலவராளி

*(ஸ, சுத்த ரி, சுத்த க, ப்ரதி ம, ப, சுத்த த, காகலி நி)*

*கண்ட சாபு தாளம்*

பல்லவி

அனாதரக்ஷக குஹா அரசே நீ வருக மிக
அனாதனேற்கு முருகா நின் அருள் பெருக

அனுபல்லவி

மனாதீத மதிவதனா வாரிஜ தளநயனா
ஞானாமுத வசனா எனாவிலும்

சரணம்

நராளி வெருவிய ஆயிராளி முகன் உயிர் உண்
சராளியாம் சரவண பவ சரபமே ஸ்வர ஜால
வராளி மருவும் குழல் வள்ளி மணவாளா குரு
பரா சுபகர கவி குஞ்சர தாஸன் எனை ஆள

✠✠✠✠

## மேளம் நாற்பது — நவநீதம்

(ஸ, சுத்த ரி, சுத்த க, ப்ரதி ம, ப, சதுசுருதி த, கைசிகி நி)

ரூபக தாளம்

பல்லவி

ஸாமீ இதே நல்ல சமயம்
தந்தருள் அபயம்

அனுபல்லவி

காமி நான் ஆனாலும் கா என்னை
கலியுக வரதா கந்தா

சரணம்

பால வேலவா நீ வா வந்தெனை
காலன் அணுகாமலும் எக்காலும் கா எனை
கோல நவநீத ப்ரிய கோபாலன் மால் மருகா
கவி குஞ்சர தாஸனுக்கு நின் அருள் கூடி நீடிடவே

✠✠✠✠✠

# மேளம் நாற்பத்தி ஒன்று — பாவனி

(ஸ, சுத்த ரி, சுத்த க, ப்ரதி ம, ப, சதுசுருதி த, காகலி நி)

மிச்ர சாபு தாளம்

பல்லவி

அஞ்சாதே நெஞ்சமே நீ குமரய்யன் பதம்
தஞ்சமே எந்நாளும் என்றும் நீ

அனுபல்லவி

மஞ்சார் சோலை மலையுகந்த கந்த
ஸ்ரீமான் இருக்க பயமேன் உனக்கே

சரணம்

பன்னிரு நயன க்ருபாகரன்
பவானி பதித பாவனி பாலன்

*ஸுவர்ண வேலவன் கவி குஞ்சர தாஸன்*
*உன்னுள் இருக்க உனக்கேன் க்லேசம் நீ*

✠✠✠✠✠

# மேளம் நாற்பத்தி இரண்டு — ரகுப்ரிய

*(ஸ, சுத்த ரி, சுத்த க, ப்ரதி ம, ப, ஷட்சுருதி த, காகலி நி)*

*ரூபக தாளம்*

*பல்லவி*

*ஸதாநந்த பக்தி தந்து எனையாள் கந்த*

*அனுபல்லவி*

*உதார குணசீலா உச்சித*
*ஸச்சிதானந்த சிவபாலா*

*சரணம்*

*குஹப்ரிய வர ரகுப்ரிய கர குமர குருபர நல்*
*அக ப்ரிய குஹ மஹாப்ரபோ மஞ்சுள மங்களகர*
*முஜ்ஜக ப்ரபோ அறுமுக ப்ரபோ ஸுந்தர*
*பன்னிருகர மிகு ஸுக ப்ரத*
*கவி குஞ்சர தாஸ மனோகர ஸுரவர*

✠✠✠✠✠

## 8. வஸு சக்ரம்

# மேளம் நாற்ப்பத்தி மூன்று — கவாம்போதி

*(ஸ, சுத்த ரி, ஸாதாரண க, ப்ரதி ம, ப, சுத்த த, சுத்த நி)*

*ஆதி தாளம்*

*பல்லவி*

*விரைவாகவெ வினை தீரவே வேல்*
*இறைவா அருள்வாய் இத்தருவாய்*

*அனுபல்லவி*

*திரைவாய்த் துரும்பென நான் உறும்*
*தீய துயரம் தீர்ப்பதுன் பாரம்*

*சரணம்*

*புதலோக ஸேனாதிப கம்பீராத்-*
*புத மா கவாம்போதி க்ருபா*
*நிதி முருகா குஞ்சர தாஸ பாரதி*
*துதி கொண்டே என் அப்பா அதி*

✠✠✠✠

# மேளம் நாற்ப்பத்தி நாலு — பவப்ரிய

*(ஸ, சுத்த ரி, ஸாதாரண க, ப்ரதி ம, ப, சுத்த த, கைசிகி நி)*

*ஆதி தாளம்*

*பல்லவி*

*செந்தில் வேலன் பதம்*
*சிந்தை செய் மனமே நிதம்*

*அனுபல்லவி*

*கந்தருவதி தேவரும்*
*வந்தனுதினம் பரவும்*

*சரணம்*

*சம்பு சிவ சங்கர பாலன்*
*உதார பூதர பூபாலன் இன்பக்*
*கும்பஸம் பவப்ரிய லோலன் கவி*
*குஞ்சர தாஸ பரிபாலன் குணசீலன்*

✠✠✠✠

## மேளம் நாற்ப்பத்தி ஐந்து — சுபபந்துவராளி

*(ஸ, சுத்த ரி, ஸாதாரண க, ப்ரதி ம, ப, சுத்த த, காகலி நி)*

*மிச்ர சாபு தாளம்*

*பல்லவி*

*வேலனே வேறே கதி இலனே*

*நின் பாதமல்லால்*

*அனுபல்லவி*

*சீலனே நாரதகான லோலனே*
*நின் பாலனேன் நான்*

*சரணம்*

*யாழிநேர் மொழியாள் விழி*
*ஏழிசைச் சுப பந்துவ ராளியாள்*
*வள்ளிக்கிசைந்த மணவாளனே*
*ஏழைக்கிரங்காயேல் நான் என் செய்வேன்*
*கவி குஞ்சர தாஸனேன் சொன்னேன்*
*என் மனதாரவே ப்ரபுவே விபுவே*

✠✠✠✠

# மேளம் நாற்ப்பத்தி ஆறு — ஷட்விதமார்க்கிணி

*(ஸ, சுத்த ரி, ஸாதாரண க, ப்ரதி ம, ப, சதுசுருதி த, கைசிகி நி)*

*ஆதி தாளம்*

*பல்லவி*

*அந்தரங்க பக்தி தந்தெனை யாளய்யா*
*அரசே நின் பொன்னடிக் கடிமை நான் உய்ய*

*அனுபல்லவி*

*ஸுந்தராங்க ஸு காங்கேய மா*
*மரதகாங்க மயூர வர துரங்க*

*சரணம்*

*உள்முகம் நோக்கும் கண்ணொளியருள் நீ*
*ஷண்மத சம்மத ஷட்வித மார்க்கிணி*
*முக்கண்ணன் அருள் ஷண்முகக் கண்மணி*
*நல்வண்ணக் கவி குஞ்சர தாஸன் என் கண் நீ*

✠✠✠✠✠

# மேளம் நாற்ப்பத்தி ஏழு — ஸுவர்ணாங்கி

*(ஸ, சுத்த ரி, ஸாதாரண க, ப்ரதி ம, ப, சதுசுருதி த, காகலி நி)*

*ரூபக தாளம்*

*பல்லவி*

*இகபர சுக மிக அருள் குஹனே*
*முருக ஷண்முகனே*

*அனுபல்லவி*

*மகபதிக்கு பொன் நகர்*
*அருள் புண்ணியவானே எனக்கு நீ தானே*

*சரணம்*

*காரார் பன்னிதுகர குமரா கலி தீரவே*

*அருள் பாராய் அபார வர க்ருபகரா வீராதிவீர தீர*
*மயூரா ஸுவர்ணாங்க ஸுந்தர*
*மார கவி குஞ்சர தாஸ மந்தார உதாரவர*

✠✠✠✠✠

# மேளம் நாற்ப்பத்தி எட்டு — திவ்யமணி

*(ஸ, சுத்த ரி, ஸாதாரண க, ப்ரதி ம, ப, ஷட்சுருதி த, காகலி நி)*

*ஆதி தாளம்*

*பல்லவி*

*அப்பா முருகைய்யா நீ எப்போதருள்வதெனக்கு*
*அப்பா பரிபூர்ண க்ருபை ப்ரபோ செப்பாய் என்*

*அனுபல்லவி*

*அப்பனே நின்மீதடியேன் செப்பும் இசைத் தமிழ் உலகு*
*ஒப்பவே சுருதி லயம் தப்பமல் பாடிடும் நயம் நானுற*

*சரணம்*

*எத்தனையோ பாபம் செய்தேன் அத்தனையும் நசிக்கவும்*
*என் திருமனையில் பொன் மின்னாள் என்னாளும் வசிக்கவும்*
*உத்தம கவி குஞ்சர தாஸன் என் உள் ருசிக்கவும்*
*ஒளிர் திவ்யமணியே ஓயாதுனை நான் பஜிக்கவும்*

✠✠✠✠✠

# 9. ப்ரம்ம சக்ரம்

## மேளம் நாற்ப்பத்தி ஒன்பது — தவளாம்பரி

(ஸ, சுத்த ரி,அந்தர க, ப்ரதி ம, ப, சுத்த த, சுத்த நி)

ரூபக தாளம்

பல்லவி

காருண்ய கந்த கானாமுதம் ஸந்ததம் தா வா

அநுபல்லவி

பாரேழோ டேழுமே புகழ்
பாகர் பண் தமிழினில் மிகு

சரணம்

தவள கமல வாஸினி தரள மாமணி பூஷணி
தவளமணி மாலினி தவளாம்பரி வாணி
தவள மாமதி போலும் வதன
தவள மேனி மின்னாள் நின் அருளால்
ஸரள மா கவி குஞ்சர தாஸன் என்
நாவில் நின்றினிதே ஊறிப்பெருக

✠✠✠✠✠

# மேளம் ஐம்பது — நாமநாரயணி

*(ஸ, சுத்த ரி,அந்தர க, ப்ரதி ம, ப, சுத்த த, கைசிகி நி)*

*ஆதி தாளம்*

*பல்லவி*

*ஏன் மனமே உனக்கிந்த பயம்*
*தீங்கெது வருமோ இக்கலியில் நமக்கென உலைந் (தேன்)*

*அனுபல்லவி*

*மான் மருவும் கரத்தெம்மான் பரவும் பெரு-*
*மான் குஹனிருக்க நமக்குறுமோ அபயம்*

*சரணம்*

*ஞானாகர வேலன் நல் நாம நாராயணி பாலன்*
*நவரஸ கானாமுத சீல கவி குஞ்சர தாஸனை*
*கண்மணி போல் காத்திடவே காத்திருக்கவே*

✠✠✠✠✠

# மேளம் ஐம்பத்தி ஒன்று — காமவர்த்தனி

*(ஸ, சுத்த ரி, அந்தர க, ப்ரதி ம, ப, சுத்த த, காகலி நி)*

*ஆதி தாளம்*

பல்லவி

கா முருகையா கலியுக மெய்யா
கருணை மால் மருகையா கையாதெனையினும்

அனுபல்லவி

பாமரனேன் நான் ஆயினும் நின் பத-
பக்தி தந்தருளி என்னை நீ முற்றிலுமே

சரணம்

காம தஹனரான் சங்கர சிவ
காம வர்த்தனி அருள் குமர
க்ஷேமகர கவி குஞ்சர தாஸன் நான்
ஸாமி உனையே நம்பினேன் ஐயா

✠✠✠✠

# மேளம் ஐம்பத்தி இரண்டு — ராமப்ரியா

(ஸ, சுத்த ரி, அந்தர க, ப்ரதி ம, ப, சதுசுருதி த, கைசிகி நி)

ஆதி தாளம்

பல்லவி

ஸாமீ ஸதா முதா நின் பாத
ஸ்மரணம் தந்தருள் சரணம் ஸதா சிவ

அனுபல்லவி

காமித சுகதாயக கந்தா
ப்ரம்மாநந்தமே மிக

சரணம்

நேமப்ரிய ஸஜ்ஜன ரக்ஷக ஶ்ரீ
ராமப்ரிய ஸோதரி ஸுத நிதி
கோமள ம்ருதுளதர வர கவி
குஞ்சர தாஸனதுள்ளம் அதனிலே

✠✠✠✠✠

# மேளம் ஐம்பத்தி மூன்று — கமனச்ரம

(ஸ, சுத்த ரி, அந்தர க, ப்ரதி ம, ப, சதுசுருதி த, காகலி நி)

## ஆதி தாளம்

பல்லவி

இகமே ஸுகம் தரும் ஷண்முகம்
எனவே வருமே பர ஸுகமுமே

அனுபல்லவி

அகமே புகழ்ந்து அனுதினமுமே நம்
ஆர்த்திகள் தீர்த்தருளி அனவரதமுமே

சரணம்

நமனாம் அவனையும் வெல்லலாமே
நற் கவி குஞ்சர தாஸன் நாமே

கமனச்ரம ஸங்கட வெம் பவ
ஸாகரக் கரை ஏறலாமே மனமே

✠✠✠✠✠

# மேளம் ஐம்பத்தி நான்கு — விச்வம்பரி

(ஸ, சுத்த ரி, அந்தர க, ப்ரதி ம, ப, ஷட்சுருதி த, காகலி நி)

ரூபக தாளம்

பல்லவி

பரமானந்த பக்தி தந்தருள் கந்த ப்ரபோ

அனுபல்லவி

வரைமாது உகந்த மைந்தநின் பாதாரவிந்த

சரணம்

இம்பரோடு விச்வம்பரி இருகால்
அறியும் பணி சரபம் பணி முருக எனும் நின்
அன்பரோடு சேர்ந்தகம் நெகிழ்ந்துருகவே தந்து
என் அப்பனே கவி குஞ்சர தாஸனின்
ஆரருள் பருக இசை பெருக

✠✠✠✠✠

# *10. திசி சக்ரம்*

## மேளம் ஐம்பத்தி ஐந்து — ச்யாமளாங்கி

*(ஸ, சதுசுருதி ரி, ஸாதாரண க, ப்ரதி ம, ப, சுத்த த, சுத்த நி)*

*மிச்ர சாபு தாளம்*

*பல்லவி*

*கந்தா பக்த தருவே நீ என்*
*சிந்தாகுலம் தீர்த்தருள் சிவ குருவே*

*அனுபல்லவி*

*நந்தா திருவோடுன் நல்லருள் சிறந்தே என்*
*சந்தானமும் தழைத்திட அருள் சுரந்தே*

*சரணம்*

*என் தாய் உனக்கிணையார் உலகில் பக்த*
*மந்தாரா கொடையில் உலகனைத்தும்*
*தந்தாள் கோமள ச்யாமளாங்கி உமை*
*மைந்தா கவி குஞ்சர தஸனுக்குகந்த*

✠✠✠✠

## மேளம் ஐம்பத்தி ஆறு — ஷண்முகப்ரியா

*(ஸ, சதுசுருதி ரி, ஸாதாரண க, ப்ரதி ம, ப, சுத்த த, கைசிகி நி)*

ஆதி தாளம்

பல்லவி

ஸுகமே ஸுகம் குஹ நாம ஸ்மரண

அனுபல்லவி

அகமேகமே ஆகி அகில
ஜகமே நிறை குஹமயமாயுறை

சரணம்

பரம ஸுகம் பஜி மனமே
பரமசிவ பால குரு குஹம்
பரம ரஸ கவி குஞ்சர தாஸ
பரம ப்ரிய ஷண்முகப்ரிய பஜன

✠✠✠✠

# மேளம் ஐம்பத்தி ஏழு — ஸிம்மேந்த்ர மத்யமம்

(ஸ, சதுசுருதி ரி, ஸாதாரண க, ப்ரதி ம, ப, சுத்த த, காகலி நி)

ஆதி தாளம்

பல்லவி

உன்னை அல்லால் வேறே கதி எனக்குண்டோ
சொல்வாய் நீயே அருள்வாய் பரம க்ருபாநிதி

அனுபல்லவி

கணை கடல் சூழ் உலகம் தனிலே கந்தா
இக பர ஸுகம் தந்தெனையாளவே

சரணம்

அம்மே எனக்கருள் என் அப்பா எனவே சொல்லியுமே
குஞ்சர தாஸனுமே உனையடைந்தேன்
கை மேல் பலன் அருள் தெய்வமே துணை செய்தருள்
ப்ரம்மேந்திரற்க்கரிய <u>ஸிம்மேந்திர மத்தியமா</u>

✠✠✠✠✠

# மேளம் ஐம்பத்தி எட்டு — ஹேமவதி

(ஸ, சதுசுருதி ரி, ஸாதாரண க, ப்ரதி ம, ப, சதுசுருதி த, கைசிகி நி)

ரூபக தாளம்

பல்லவி

மனமே மறவாதே குஹதேவனையே கனவிலு

அனுபல்லவி

இனிதாம் நலமதனோடு தீங்கெது தான் வரினுமே

சரணம்

ஸாமி பதமே ஸதா நீ மனமே நினைந்திடவே
இஷ்ட காமியங்கள் யாவும் தந்திடுமே

வனமேவு குறமின்னாமவளோ
<u>டேமவதி</u> மின்னாள் மருவு கந்தனுமே
நய கவி குஞ்சர தாஸன் நமையாளும் ஸந்ததமே

✠✠✠✠✠

# மேளம் ஐம்பத்தி ஒன்பது — தர்மவதி

(ஸ, சதுசுருதி ரி, ஸாதாரண க, ப்ரதி ம, ப, சதுசுருதி த, காகலி நி)

மிச்ர சாபு தாளம்

பல்லவி

கந்தா பக்த சிந்தாமணி என்
சிந்தாகுலம் இடிப் பிணி தீர்த்தருள் நீ

அனுபல்லவி

ஸந்தானம் சந்தனம் பாரிஜாதம்
மந்தாரம் கற்பகம் நேர் உதாரம்

சரணம்

அருமையறியா மாந்தர் தம்பால்
அலைந்தலைந்து நான் ஏமாந்தே
திரியாமலே <u>தர்மவதி</u> உமையாள் தந்த
மைந்தா சந்தம் மிகுந்த கவி
குஞ்சர தாஸன் குறைகள் சிந்த

✠✠✠✠✠

# மேளம் அறுபது — நீதிமதி

(ஸ, சதுசுருதி ரி, ஸாதாரண க, ப்ரதி ம, ப, ஷட்சுருதி த, காகலி நி)

ரூபக தாளம்

பல்லவி

மோஹனகர முத்துகுமர
ஸ்ரீகர கருணாகர வரம் அருள்

அனுபல்லவி

மாகன மயில்வாஹன நறும்
பாகன ம்ருது பாஷித மன

சரணம்

ஆதிசிவனருள் பரஞ்சோதி நினது பதமே துதி
நீதிமதி தந்தருள் நீ தயாநிதி
தீதில்லாத கீதச் செஞ்சொற் கவி குஞ்சர
தாஸ நேச கிரிவாஸ மந்தஹாஸ வதன

✠✠✠✠✠

## 11. ருத்ர சக்ரம்

# மேளம் அறுபத்தி ஒன்று — காந்தாமணி

(ஸ, சதுசுருதி ரி, அந்தர க, ப்ரதி ம, ப, சுத்த த, சுத்த நி)

*ஆதி தாளம்*

*பல்லவி*

*நாத ஸுகம் தரு நாதகுஹன் திரு*
*நாமம் நவின்றிரு நீ மனமே தினமே*

*அனுபல்லவி*

*சீதள ரஞ்சித செஞ்சொலார் அமுத*
*போத புனித ஸங்கீத விநோத*

*சரணம்*

*பூந்தார் அணிகுழல் காந்தாமணி வள்ளி*
*போதக மாது ஸமேதனாய்த்*
*தனதாம் தேன் கவி குஞ்சர தாஸன் சிந்தை*
*பூந்தேன் நவரஸ பூரித தசவித*

# மேளம் அறுபத்தி இரண்டு — ரிஷபப்ரியா

*(ஸ, சதுசுருதி ரி, அந்தர க, ப்ரதி ம, ப, சுத்த த, கைசிகி நி)*

*ஆதி தாளம்*

*பல்லவி*

*கன நய தேசிக கான ரஸிக சிகா*

*மணி நீயே கந்தா எனக் கருள் நீயே- இன்னும்*

*அனுபல்லவி*

*கன நய சொல் பொருள் கன கம்பீரம்*
*இனி நய சுருதியோடியை லய தீர*

*சரணம்*

*ஷட்ஜ ரிஷபப்ரிய காந்தர மத்யம*
*பஞ்சம தைவத நிஷாத வித*
*ஸப்த ஸ்வர ஸங்கீத கவி குஞ்சர*
*தாஸன் அனவரதம் தரும் நின் அருள் மய*

✠✠✠✠✠

# மேளம் அறுபத்தி மூன்று — லதாங்கி

*(ஸ, சதுசுருதி ரி, அந்தர க, ப்ரதி ம, ப, சுத்த த, காகலி நி)*

*கண்ட சாபு தாளம்*

*பல்லவி*

*கைகூட வேணுமே கந்தா நின்னருள் எனக்கும்*

*அனுபல்லவி*

*மய் கூடு தமிழ் முனி நக்கீரர் அருணகிரிக்கும்*
*ஐயா நின் அருள் வந்து கூடிய வாரது போல்*

*சரணம்*

*ஸுதாங்க ஸோம ஸுந்தரர் பங்கில் உறை உமா*
*லதாங்க மீனாங்க நயன பாலா*
*மதாங்க சூரனுடல் மாள வேல் வாங்கு கர*
*தலாங்க கவி குஞ்சர தாஸன் செந்தமிழ் ஓங்க*

✠✠✠✠✠

# மேளம் அறுபத்தி நான்கு — வாசஸ்பதி

*(ஸ, சதுசுருதி ரி, அந்தர க, ப்ரதி ம, ப, சதுசுருதி த, கைசிகி நி)*

*ரூபக தாளம்*

*பல்லவி*

*இக பர ஸுக தாயகா*
*வரம் தந்தருள் வள்ளி நாயகா*

*அனுபல்லவி*

*குஹபர ஸத் குருவர ஷண்முக பராத்பரா*

*சரணம்*

*நீயே கதியே க்ருபாநிதியே நல் வாக்கருள் புரிவாயே*
*வாசஸ்பதி துதி வாக்பதி நீயே இன்னும் என்*
*தாயே ஸத்பக்தி பாக்யம் தந்தருள்வாயே கன தனமொடு*
*ஸௌபாக்யம் குஞ்சர தாஸன் தனக்கு நீயே*

✠✠✠✠✠

# மேளம் அறுபத்தி ஐந்து — மேசகல்யாணி

*(ஸ, சதுசுருதி ரி,அந்தர க, ப்ரதி ம, ப, சதுசுருதி த, காகலி நி)*

*ஆதி தாளம்*

*பல்லவி*

*ஸதாநந்தமே தரும் கந்த வேல்*
*பதாரவிந்தமே பஜி மனமே*

*அனுபல்லவி*

*கதாநந்த மாகாந்தக் கடல்*
*அமுதாம் தனை ஆராயுந்தொறுமே*

*சரணம்*

*வாசாம கோசரி கௌரி வாணி*
*தேசாரு மேனி மேச கல்யாணி*
*ஆசார சீலி அபிராமி*
*அரனாரிடம் பிரிய சிவகாமி*
*அருல் பாலனே அடியாற்க்கருள்*
*அபயகர ஷண்முக வேலனே*
*வர கவி குஞ்சர தாஸ பரிபாலா*
*வெனவே மாலாகிய*

✠✠✠✠✠

# மேளம் அறுபத்தி ஆறு — சித்ரம்பரி

*(ஸ, சதுசுருதி ரி, அந்தர க, ப்ரதி ம, ப, ஷாட்சுருதி த, காகலி நி)*

*மிச்ர சாபு தாளம்*

*பல்லவி*

*ஸாம கான லோலா ஸத்பக்தி தந்தருள்*
*வடி வேலா ஸகலாகம மூலா*

*அனுபல்லவி*

*காமமாதி அறுபகையற்ப் போக்கி*
*ஸம தமாதி ஸாதனங்களுண்டாக்கி*

*சரணம்*

*அத்தர் நுதற்க் கண் அருள் வாரிக் குகந்த பாரி*
சித்ரம்பரி *கௌரி தந்தருள் புரி*
*பக்தி மிகு கவி குஞ்சர தாஸ*
*பரிபால சீல கருணாலவால பால*

✠✠✠✠

## *12. ஆதித்ய சக்ரம்*

# மேளம் அறுபத்தி ஏழு — ஸுசரித்ர

*(ஸ, ஷட்சுருதி ரி, அந்தர க, ப்ரதி ம, ப, சுத்த த, சுத்த நி)*

ரூபக தாளம்

பல்லவி

வேலு மயிலுமே வெற்றி
எவ்வேளையிலுமே வெல்லுமே

அனுபல்லவி

காலை மாலையுமே மனமே துதி
காலன் வரினுமே கந்தன்

சரணம்

சித்ரகவி நக்கீரன் தத்தைத் தவிர்த்த தீரன்
கஜ வத்ர வீரபத்ர வீரபாஹு ஸோதரன்
ஆறு வத்ர வசிகரன் ஸுசரித்ர ஸுசிகரன்
விசித்ர கவி குஞ்சர தாஸ மித்ர ருசிகரன்

✠✠✠✠

## மேளம் அறுபத்தி எட்டு — ஜ்யோதிஸ்வரூபிணி

(ஸ, ஷட்சுருதி ரி, அந்தர க, ப்ரதி ம, ப, சுத்த த, கைசிகி நி)

மிச்ர சாபு தாளம்

பல்லவி

கானாமுத பானம் (கந்த)

இருக்க வேறு பானமீதபிமானம் உனக்கேன் மனமே

அனுபல்லவி

ஞான் அமுத குஹன் அருளால் அகில மேள
ராக ரத்னாகரத்தில் கடைந்தெடுத்த (கந்த)

சரணம்

சொல்லமுதோடும் நல் உபகரணங்களாம்
ச்ருதி லயமோடு நவரஸமுறவே கனி
துல்ய கவி குஞ்சர தாஸன் துதி செய்யும்
ஜ்யோதிஸ்வரூபிணி சக்திவேலன் அருளால் அமையும்

✠✠✠✠

# மேளம் அறுபத்தி ஒன்பது — தாதுவர்த்தனி

(ஸ, ஷட்சுருதி ரி, அந்தர க, ப்ரதி ம, ப, சுத்த த, காகலி நி)

ஆதி தாளம்

பல்லவி

ஸுககர ஸோம ஸுந்தர குமர
சுபகரம் அருள் அமர வர

அனுபல்லவி

இஹபர ஸுக தாயக குஹ ஸுர நாயக

*ஜக ரக்ஷக மால் மனோஹர*

*சரணம்*

*மாதுமலர் திருமங்கல பொற் கலை*
*மாதொடும் பணி மனோன்மணி அகில*
*தாதுவர்த்தனி  ஸத் கவி குஞ்சர*
*தாஸ வர்த்தனி அங்கயற்கணி மருவும்*

✠✠✠✠✠

## மேளம் எழுபது — நாஸிகாபூஷணி

*(ஸ, ஷாட்துசுருதி ரி, அந்தர க, ப்ரதி ம, ப, சதுசுருதி த, கைசிகி நி)*

*மிச்ர சாபு தாளம்*

*பல்லவி*

*தந்தருள் ஐயா கந்தனே நீ மெய்யாக*

*அனுபல்லவி*

*சிந்தனை சக்தி செயல் எல்லாம் செலுத்தி என்*
*உந்தனையே நத்தி உயர்ந்திடவே செய் பக்தி*

*சரணம்*

*தேசிக மணி நீ தேஜோமயன் நீ*
*வாச கவி குஞ்சர தாஸக வாஸன் நீ*

*மா ஸுக பாஷிணி நாஸிகாபூஷணி*
*மாசிலா கற்பு மா மாமணி பாலன் நீ (யாகத் தந்தருள்)*

✠✠✠✠✠

# மேளம் எழுபத்தி ஒன்று — கோஸலம்

*(ஸ, ஷட்துசுருதி ரி, அந்தர க, ப்ரதி ம, ப, சதுசுருதி த, காகலி நி)*

*ரூபக தாளம்*

*பல்லவி*

*கா குஹா ஷண்முகா நீயே கதி இதே ததி*

*அனுபல்லவி*

*ஆகுவாஹன ஸோதர தெய்*
*வானை வள்ளி மனோஹர*

*சரணம்*

*சாலவே பாஞ்சால கோஸலாதி*
*நாடெங்கும் நீடவே நின்*
*சீலமே சொலியே இன்னும் பல*
*செந்தமிழ் இசை பாடவே*
*காலன் அணுகாமலே கலியால் நலியாமலே*
*எக் காலும் கவி குஞ்சர தாஸனை*
*கண்ணின் இமை போலே*

✠✠✠✠✠

# மேளம் எழுபத்தி இரண்டு — ரஸிகப்ரியா

*(ஸ, ஷட்சுருதி ரி, அந்தர க, ப்ரதி ம, ப, ஷட்சுருதி த, காகலி நி)*

*ஆதி தாளம்*

*பல்லவி*

*அருள் செய்ய வேணுமயா நீ*
*அரசே முருகையா( நீ)*

*அனுபல்லவி*

*மருள் உறவே என்னை மயக்கிடும் மாய வல்*
*இருள் அறவே ஞான சூரியன் எனவே வந்தோர் சொல்*

*சரணம்*

*நிலையா காயம் இலையே இதனை*
*நிலையென்றெண்ணுவதென மாயம்*
*நிலையென்றுனையே நினைந்து நான் உய்ய*
*நேச கவி குஞ்சர தாஸ ரஸிகப்ரிய*

✠✠✠✠

# மங்கள கீர்த்தனம்

ராகம் — ஸுரட்டி (மேளம் 28ல் ஜன்யம்)
தாளம் —ஆதி
(ஸ ரி ம ப நி ஸ – ஸ நி த ப ம க ரி ஸ)

பல்லவி

மங்களம் மயில் வாஹன
மா குமாரனுக்கு

அனுபல்லவி

திங்கள் மா வதனம் திகழும் குற
மங்கை வள்ளி மணாளனுக்கு சுப (மங்களம்)

சரணம்

அம்பிகையாள் வர பாலனுக்கு - வினா
யக ஸோதர ஸுகுணாளனுக்கு
சம்பு சங்கர குரு சீலனுக்கு - குஞ்
சரியை மருவி மகிழ் லோலனுக்கு
வம்பவிழ் தண் கடம்பரனுக்கு - திரு
மால் மருகனாம் ஸுகுமாரனுக்கு
கும்பமுனிக் குபகாரனுக்கு - கவி
குஞ்சர தாஸன் குடி காக்கும்
வேல் வீரனுக்கு (மங்களம்)

✠✠✠✠✠